

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10.12.2025 அன்று சென்னை, எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்திய 14 வது ஆடவர் ஹாக்கி ஜுனியர் உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற ஜெர்மனி அணிக்கு வெற்றிக் கோப்பையை வழங்கினார். இந்நிகழ்வில் பீகார் மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் செல்வி ஸ்ரேயாஸி சிங், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சர்வதேச ஹாக்கி சம்மேளனத் தலைவர் டத்தோ தயாப் இக்ரம், இந்திய ஹாக்கி சங்கத் தலைவர் திலீப் திர்கி, செயலாளர் போலாநாத் சிங், பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன், இயக்குநர் (பொது) கமாண்டர் ஆர்.கே. ஸ்ரீவத்சவா, ஹாக்கி சங்க நிர்வாகிகள், ஹாக்கி விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### “14வது ஆடவர் ஹாக்கி ஜுனியர் உலகக் கோப்பை 2025” இறுதிப் போட்டியில்

# வெற்றி பெற்ற ஜெர்மனி அணிக்கு வெற்றிக் கோப்பை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, டிச.12-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10.12.2025 அன்று சென்னை எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்ட ரங்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்திய 14வது ஆடவர் ஹாக்கி ஜுனியர் உலகக் கோப்பை 2025 இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற ஜெர்மனி அணியின் வீரர்களுக்கு தங்கப் பதக்கம் அணிவித்து உலகக் கோப்பையை வழங்கி பாராட்டுத் தெரிவித்தார்.**



மேலும் இந்தப் போட்டியில் இரண்டாம் இடம் பிடித்த ஸ்பெயின் அணியின் வீரர்களுக்கு வெள்ளிப்பதக்கத்தையும், மூன்றாம் இடம் பிடித்த இந்திய அணியின் வீரர்களுக்கு வெண்கலப் பதக்கத்தையும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அணிவித்து பாராட்டுத் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவின் விளை யாட்டுத் தலைநகரமாக உருவாக்கிடும் வகையில் பல்வேறு சர்வதேசப் போட்டிகளை சென்னையில் நடத்தி வருகின்றார். அதனடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் சென்னையில் ”ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி சென்னை – 2023 போட்டியை நடத்தினார்.

தொடர்ந்து 14வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டியை தமிழ்நாட்டில் நடத்தும் வாய்ப்பினைப் பெற்ற முதலமைச்சர் அவர்கள் 5.11.2025 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் போட்டிக்கான வெற்றிக் கோப்பையை அறிமுகப்படுத்தினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10.11.2025 அன்று சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்ட ரங்கில் 14ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டியின் காங்கேயன் சின்னத்தினை அறிமுகப்படுத்தியதுடன், இந்தப் போட்டிக்காக 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை மைதானம் மற்றும் பார்வையாளர் மாடம் ஆகியவற்றுடன் புதுப்பிக்கப்பட்ட மதுரை சர்வதேச ஹாக்கி விளையாட்ட ரங்கத்தை 22.11.2025 அன்று திறந்து வைத்தார்.

14வது ” ஆடவர் ஹாக்கி ஜுனியர் உலகக் கோப்பை 2025 ” போட்டி நவம்பர் 28 ஆம் தேதி முதல் டிசம்பர் 10 ஆம் தேதி வரை சென்னை, மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம் மற்றும் மதுரை சர்வதேச ஹாக்கி விளையாட்டரங்கத்திலும் நடைபெற்றது.

ஹாக்கி இந்தியாவுடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து நடத்திய இப்போட்டியில், இந்தியா, சீனா, மலேசியா, ஜப்பான், ஜெர்மனி, நெதர்லாந்து, ஆஸ்திரேலியா, மற்றும் அர்ஜென்டினா உள்ளிட்ட 24 நாடுகள் பங்கேற்றன.

மதுரையில் நடைபெற்ற ஹாக்கி போட்டிகளில் கலந்து கொண்ட உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஹாக்கி வீரர்கள் தமிழ்நாட்டின் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை அறிந்து கொள்ளும் வகையில் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டி நடத்தப்பட்டதுடன், அவர்கள் மதுரையில் தமிழ்மக்களின் விருந்தோம்பலிலும், உபசரிப்பிலும் திளைத்து நீங்கா நினைவுகளைப் பெற்றனர்.

நேற்று ஜெர்மனி மற்றும் ஸ்பெயின் நாடுகளுக்கிடையே சென்னை, எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில், நடைபெற்ற ”ஆடவர் ஹாக்கி ஜுனியர் உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற ஜெர்மனி அணி வீரர்களுக்கு தங்கப்பதக்கம் அணிவித்து உலகக் கோப்பையை வழங்கி பாராட்டுத் தெரிவித்தார்.

மேலும் இந்தப் போட்டியில் இரண்டாம் இடம் பிடித்த ஸ்பெயின் அணியின் வீரர்களுக்கு வெள்ளிப்பதக்கத்தையும், மூன்றாம் இடம் பிடித்த இந்திய அணியின் வீரர்களுக்கு வெண்கலப் பதக்கத்தையும் துணை முதலமைச்சர் அணிவித்து பாராட்டுத் தெரிவித்தார்.

இந்தப் பரிசளிப்பு விழாவில் பீகார் மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் செல்வி ஸ்ரேயாஸி சிங், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சர்வதேச ஹாக்கி சம்மேளனத் தலைவர் டத்தோ தயாப் இக்ரம், இந்திய ஹாக்கி சங்கத் தலைவர் திலீப் திர்கி, செயலாளர் போலாநாத் சிங், பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன், இயக்குநர் (பொது) கமாண்டர் ஆர்.கே. ஸ்ரீவத்சவா, ஹாக்கி சங்க நிர்வாகிகள், ஹாக்கி விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விக்கிரவாண்டி தொகுதியிலுள்ள கும்பகோணம்

# தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைத்திடுக!

## நெடுஞ்சாலைத்துறை ஆணையரிடம் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. மனு!

திண்டிவனம், டிச. 12–

விக்கிரவாண்டி தொகுதிக் குட்பட்ட சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் விபத்து நடக்கக்கூடிய கரும் புள்ளி வளைவுகளான(blogs spot) வி.சாலை, சூர்யா காலேஜ் சந்திப்பு , திருவாமத்தூர் கூட்டு சாலை, விராட்டி குப்பம் சாலை ஆகிய இடங்களில் சிறிய சுரங் கப்பாலம் , ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை, கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பனையபுரம் ஆகிய இடங்களில் பெரிய மேம்பாலம் அமைக்க கோரி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய தலைவர் சந்தோஷ் குமார் யாதவ் அவர்களை, விசிக தலைவர் தொல். திருமாவளவன் MP, விசிக பொதுச்செயலாளர் ரவிக்குமார் எம்.பி. ஆகியோருடன் சென்று விக்கிரவாண்டி எம்எல்ஏ அன்னியூர் சிவா கோரிக்கை மனு அளித்தார்.

மேலும் தேசிய நெடுஞ்சாலைகளில் புதியாக அமைக்கப்படும் மேம்பாலங்களின் சர்வீஸ் சாலைகளை சிமெண்ட் சாலைகளாக அமைக்க வேண்டும் எனவும் இரண்டு ஆண்டுகளாக கிடப்பில் போட்டுள்ள முண்டியம்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை எதிரில் மேம் பால பணியை தொடங்கி விரைந்து முடிக்க வேண்டும் எனவும் இந்த மனுவில் கேட்டுக் கொண்டார்.

குறிப்பிட்ட இடங்களில் இந்திய தேசியப் நெடுஞ்சாலை ஆணைய தலைவர் சந்தோஷ் குமார் யாதவ் நேரில் வந்து ஆய்வு செய்வது நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.



விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் விபத்து நடக்கக்கூடிய கரும்புள்ளி வளைவுகளான(BLOGS SPOT) வி.சாலை, சூர்யா காலேஜ் சந்திப்பு , திருவாமத்தூர் கூட்டு சாலை, விராட்டி குப்பம் சாலை ஆகிய இடங்களில் சிறிய சுரங்கப்பாலம் , ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை, கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பனையபுரம் ஆகிய இடங்களில் பெரிய மேம்பாலம் அமைக்க கோரி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய தலைவர் சந்தோஷ் குமார் யாதவை, விசிக தலைவர் தொல். திருமாவளவன் MP, விசிக பொதுச்செயலாளர் ரவிக்குமார் MP ஆகியோருடன் சென்று விக்கிரவாண்டி எம்.எல்.ஏ. அன்னியூர் சிவா கோரிக்கை மனு அளித்தார்



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10.12.2025 அன்று சென்னை, எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்திய 14 வது ஆடவர் ஹாக்கி ஜுனியர் உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற ஜெர்மனி அணிக்கு வெற்றிக் கோப்பையை வழங்கினார். இந்நிகழ்வில் பீகார் மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் செல்வி ஸ்ரேயாஸி சிங், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சர்வதேச ஹாக்கி சம்மேளனத் தலைவர் டத்தோ தயாப் இக்ரம், இந்திய ஹாக்கி சங்கத் தலைவர் திலீப் திர்கி, செயலாளர் போலாநாத் சிங், பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன், இயக்குநர் (பொது) கமாண்டர் ஆர்.கே. ஸ்ரீவத்சவா, ஹாக்கி சங்க நிர்வாகிகள், ஹாக்கி விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கோவையிலிருந்து உதகை வழியே மைசூர், பெங்களூருவில் அமையவுள்ள

# தேசிய நெடுஞ்சாலை திட்டத்திற்கு உடனே ஒப்புதல் தருக!

## ஒன்றிய அமைச்சரிடம் ஆ.ராசா எம்.பி. நேரில் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 12-

10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள கோவை - உதகை - மைசூர் - பெங்களூரு பகுதியில் அமையவுள்ள தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு உடனே ஒப்புதல் வழங்கக் கோரி ஒன்றிய அமைச்சரிடம் மக்களவை கழகக் கொறடா ஆ.ராசா வலியுறுத்தினார்.

ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்காரியை, தி.மு.க. மக்களவை கொறடா ஆ.ராசா நேரில் சந்தித்து வழங்கிய கடிதம் வருமாறு:-

கோவை மண்டலத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள சாலைத் திட்டங்கள் தொடர்பாக நான் ஏற்கனவே தங்களுக்கு எழுதிய கடிதத்தின் (2019 ஏப்.4) தொடர்ச்சிதான் இந்தக் கடிதம்.

தேசிய நெடுஞ்சாலை எண்.181 (கோவை - உதகை - குண்டல் பட்டு சாலை) தொடர்பாக சேலம் தேசிய நெடுஞ்சாலை பிரிவு ரூ.8698.88 லட்சத்தில் மதிப்பீடு செய்துள்ளது.(தனது 2025 - 26 ஆண்டு திட்டத்தில்) அது இந்திய தேசிய நெடுஞ்சாலை குழுமமும் தனது திட்டத்தில் இணைத்துள்ளது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

தேசிய நெடுஞ்சாலை 181 என்பது கோவை பைபாஸ் இடத்தில் புறப்பட்டு முக்கிய சுற்றுலா தலங்களான மேட்டுப்பாளையம், குன்னூர், உதகை, கூடலூர் வழியாக கர்நாடகாவில் உள்ள குண்டல்பட்டு வரை இருப்பதாகும்.

மைசூர், பெங்களூருக்கு உதகையிலிருந்து செல்வதற்கு இதுதான் குறைந்த தூர வழிப் பாதையாகும். மொத்தமுள்ள 108.4 கிலோ மீட்டர் தூரத்தில் 28.4 கி.மீ. சாலை பார்லையார் முதல் மரப்பாலம் வரையிலும், மீதமுள்ள தூரம் குன்னூரிலிருந்து ஃபிங்கர் போஸ்ட் வரையிலுமாகும். இது அந்த திட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தச் சாலையின் முக்கியத்துவம் குறித்து நீங்களும் நன்கு அறிவீர்கள். சுற்றுலா ஈர்ப்பு காரணமாக இப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் கடுமையாக இருக்கும்.



அதுமட்டுமின்றி இந்த மலைப் பகுதியில் தரைப் பகுதிகளில் பெய்வதை விட மழை மிகவும் அதிகமாகவே பெய்யும். அதன் காரணமாக சாலைகளில் குண்டும் குழியும் மிகவும் அதிக அளவில் இருந்து, அப்பகுதியில் பயணம் மேற்கொள்வது என்பதே மிகவும் சிரமமாக இருக்கும்.

இது தொடர்பாக சென்னையில் உள்ள தேசிய நெடுஞ்சாலைத் துறை முதன்மை பொறியாளர் ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்துக்கு எழுதியுள்ள கடிதநகலையும் இத்துடன் தங்கள் பார்வைக்கு இணைத்துள்ளேன்.

எனவே அந்த சாலையின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு தேவையான தொழில் நுட்ப மற்றும் நிர்வாக ஒப்புதலை வழங்கி, அத்திட்டத்திற்கான ரூ.8698.88 லட்சம் தொகையை ஒதுக்கீடு செய்ய தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஆ.ராசா ஒன்றிய அமைச்சரிடம் வலியுறுத்தி கடிதம் அளித்தார்.

### தீன்தயாள் மாற்றுத்திறனாளிகள்

# மறுவாழ்வு திட்டம், ஒன்றிய அரசினரால் முறையாக செயல்படுத்தப்படுகிறதா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 12-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 09 டிசம்பர் 2025 அன்று மக்களவையில், தீன்தயாள் மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வு திட்டம் முறை யாக, ஒன்றிய அரசால் நடைமுறைப் படுத்தப்படுகிறதா? என்றும் கடந்த ஐந்தாண்டுகளில், எவ்வளவு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன? என்றும், தமிழ்நாட்டின் எந்தெந்த மாவட்டங்களில், எவ்வளவு திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது? என்றும் ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணைய மைச்சர் பி. எல். வர்மா அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணையமைச்சர் அளித்த பதில் பின் வருமாறு :-

தீன்தயாள் மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வு திட்டத்திற்கென, கடந்த மூன்று நிதியாண்டுகளில் ரூபாய் 384 கோடிகள் செலவிடப்பட்டுள்ளது என்றும், 25 மாநிலங்களில், கடந்த 2020-21 நிதி யாண்டில் 342 திட்டங்களுக்கென ரூபாய் 77 கோடிகள் செலவிடப்பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும் தமிழ்நாட்டில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருநெல்வேலி, ஈரோடு, மதுரை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 54 திட்டங்களுக்கென கடந்த ஐந்து நிதி யாண்டுகளில், ரூபாய் 11 கோடிகள் தீன்தயாள் மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வு திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது என்று ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணையமைச்சர் திரு. பி. எல். வர்மா அவர்கள், மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### கல்வியாளர் அணித் தலைவர் புலவர் செந்தலை ந.கவுதமன் கோரிக்கை ஏற்பு!

# ‘சிந்து சரசுவதி’ மதவெறிக் கருத்தரங்கத்தைக் கோவைக் கல்லூரி கைவிட்டது!

கோவை, டிச. 12 -

சிந்துவெளி நாகரிகத்தை ‘சிந்து சரசுவதி ‘ நாகரிகம் என மாற்றித் தமிழர் வரலாற்றைச் சிறுமைப்படுத்த மதப்புரட்டர்களும் தமிழின எதிரிகளும் கோவையில் முயற்சி எடுத்தார்கள். அவர்கள் எடுத்த கெடுமுயற்சிதடுத்துநிறுத்தப்பட்டு விட்டது.

‘ சரசுவதி நாகரிகம் ‘ எனும் புராணப்பொய்யை ஆய்வுக் கருத்தரங்கமாக நடத்தி நம்ப வைக்க முயன்றது கோவை கொங்குநாடு கலைஅறிவியல் கல்லூரி !

மதவெறிக் கருத்தரங்கம் நடத்த எதிர்ப்பு வலுத்ததால் , நிகழ்ச்சியை ஒத்தி வைப்பதாகக் கல்லூரி அறிவித்துள்ளது.

திசம்பர் 12 , 13 நாள்களில் நிகழவிருந்த மதவெறிக் கருத்தரங்கம் கோவை முற்போக்கு அமைப்புகளின் ஒன்றுபட்ட எதிர்ப்பால் விலக்கிக்கொள்ள ப் பட்டு விட்டது.

ஆர்.எஸ்.எஸ். மதவெறி அமைப்பின் கிளையான தென்னிந்திய ஆய்வு மையம்(CSIS) கல்லூரிகளுக்குள் கருத்தரங்கம் என்ற பெயரில் நுழைந்து மத வெறி நச்சுக்கருத்துகளைப் புகுத்தும் முயற்சி கோவையில் முறியடிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. கல்வியாளர் அணியின் தலைவர் புலவர் செந்தலை ந.கவுதமன் விடுத்த கண்டன அறிக்கை தமிழ்நாடு முழுதும் உள்ள கல்வித்துறை ஆர்வலர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்று விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

மதவெறிக் கருத்தரங்கை நடத்த இருந்த கல்லூரியைக் கோவை முற்போக்கு அமைப்புகள் முற்றுகையிடத் திட்டமிட்டிருந்தனர். மதவெறிக் கருத்தரங்கம் கைவிடப்பட்டு விட்டதால் முற்றுகைப் போராட்டமும் கைவிடப்பட்டது.